பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது 1953 ★ விலை 7 காசு ★ இணைப்புகளில் 10 காசு

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன்

மலர்: 20 சென்னை: ஐப்பசி 8 (24—10—72) செவ்வாய் வெளியூர்: ஐப்பசி 9 (25—10—72) புதன் இதழ்: 108

ஊராட்சி ஒன்றியத்தில் மேலும் ஒரு சுகாதார நிலையம்

மதுரை, அக். 24—

"ஒவ்வொரு மாவட்டத்திலும், ஊராட்சி ஒன்றிய வளாகத்தில் ஒரு தொடக்க சுகாதார நிலையம் இருக்கிறது; இதைத் தவிர, ஒவ்வொரு வளாகத்திலும் (பிளாக்குகளிலும்) இன்னொரு சுகாதார நிலையம் ஏற்படுத்துவதற்கான பிரேரணை ஒன்று தமிழக அரசினால் மத்திய அரசிடம் அளிக்கப்பட்டிருக்கிறது"

என்று மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் க. அன்பழகன் அவர்கள் தெரிவித்தார்.

இரத்தம் தோய்ந்த கொடியை இரவலாகப்பெறுவது இலட்சியமா?

தியாக வரலாறு இல்லாத எந்தக் கட்சியும் நின்று நிலைக்க இயலாது

கொட்டிய குருதியால் ஒளிசிந்தி நிற்கும் கழகக் கோட்டை தகர்ந்து விடாது—கழகத் தலைவர் கலைஞர் உறுதி

சென்னை, அக். 24—

"அமைப்பு முறை இல்லாமல்—அதை அமைப்பதற்குச் செயல் வீரர்கள் இல்லாமல்—அந்தச் செயல் வீரர்கட்குத் தியாக முத்திரை இல்லாமல்—அந்தத் தியாக முத்திரைகட்கு நீண்ட கால வரலாறு இல்லாமல் எந்த ஒரு கட்சி தொடங்கப்பட்டாலும், அந்தக் கட்சி மணல்மேல் வைக்கப்பட்ட செடியைப்போல கீழே விழுந்துவிடுமேயல்லாமல், ஆழக் குழிதோண்டிப் புதைக்கப்பட்ட மரமாக என்றைக்கும் ஆக முடியாது!

"தி. மு. கழகத்தின் கோட்டை இன்று ஒளி பரப்பிக்கொண்டு நிற்கிறதென்றால், இந்தக் கழகத்தின் கோட்டைச் சுவர்களை எழுப்புவதற்கு இரத்தம் சிந்தியவர்கள்தான் அதற்குக் காரணமாவர்!

"தியாகச் செம்மல்கள் பலர் தங்கள் இரத்தத்தைப் பூமியிலே கொட்டி—நனைத்து அதிலே தோய்த்து எடுக்கப்பட்ட கொடியல்லவா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொடி! அதை இரவலாகப் பெற்று - அதிலே அண்ணாவைக் கொண்டுபோய்ப் பதித்துக்கொள்வது என்பது வியாபாரம்தான்! அது இலட்சியம் அல்ல!

"தி. மு. கழகத்தின் கொடி பட்டொளி வீசிப் பறக்கிறதென்றால், இலட்சிய வீரர்கள் பலர் அடிபட்டு உதைபட்டு—அடக்குமுறைகட்கு ஆளாகி—சித்திரவதைகளை ஏற்றுக்கொண்டு—சிரித்த முகத்தோடு சிறைச்சாலைகட்குச் சென்று—இந்தி எதிர்ப்பு நடக்கின்ற நேரத்தில் வேறு மாநிலத்திற்குச் செல்லாமல் இந்த மாநிலத்திலேயே இருந்து பாடுபட்டு—உருவாக்கியதுதான் அதற்குக் காரணம்!

"அந்தக் கழகத்திற்கு இன்று ஆபத்து வந்துவிடுமென்றால்—சோதனை வந்துவிடுகிறதென்றால், அதைக் கட்டிக்காக்கக்கூடிய கொள்கைத் தங்கங்கள் இலட்சோபலட்சம் பேர் தமிழகத்திலே இருக்கிறார்கள்"

என்று கழகத் தலைவர் கலைஞர் அவர்கள், சென்னை 91-வது வட்டம் இராயப்பேட்டை நெடுஞ்சாலையும்—வி. எம். சாலையும் சந்திக்கும் இடத்தில் அண்ணா அவர்களின் சிலையைத் திறந்துவைத்துப் பேசுகையில் தெளிவுறச் சுட்டிக்காட்டி விளக்கினார்.

'தோற்றம்' பற்றி பக்தவத்சலம் கூற்று

குதர்க்கக் கருத்தின் உண்மை நிலை என்ன?

பின்னர் அவர், முன்னாள் முதலமைச்சர் எம். பக்தவத்சலத்தின் கூற்றுபற்றி விளக்கிப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

நாவலர் அவர்கள் பேசுகின்ற நேரத்தில், முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலம் அவர்களைப் பற்றி நினைவுபடுத்தினார்; அவர் இன்றுகூடப் பத்திரிகையிலே எழுதியிருக்கிறார்; எழுதுகின்ற வேகத்தில் ஒரு உண்மையை அவர் சொல்லியிருக்கிறார்; நான் இந்திரா காந்தி அம்மையாரைப் பற்றிச் சொன்னதைக் கண்டித்துவிட்டு, எம். ஜி. ஆரை ஆதரித்துச் சொல்லும்போது சொல்கிறார்—

"தி. மு. க-வின் மூலபலம் எல்லாம் எம். ஜி. ஆர். பக்கமே நிற்பதுபோன்ற 'தோற்றத்'தை இன்று யாவரும் காண்கிறார்கள்" என்று.

தமிழ் புரிந்தவர்களுக்கு இதன் உண்மை புரியும்—'எவ்வளவு அழகாக உண்மையைப் பக்தவத்சலம் எவ்வளவு கண்டிப்பாக எழுதியிருக்கிறார்' என்று!

எனக்கும்—நாவலருக்கும் அவரை நன்றாகத் தெரியும்; அவர் எப்போதும், 'வெட்டு ஒன்று—துண்டு இரண்டு' என்று பேசக்கூடிய பண்பு படைத்தவர்; சட்டமன்றத்திலேயே திடீர் திடீரென்று நகைச்சுவை வெடிகளை உதிர்ப்பார் அவர்!

அவர் இப்போது எழுதியிருப்பதை மேம்போக்காகப் படிப்பவர்கள், ஏதோ—முன்னேற்றக் கழகத்தின் மூலபலம் எல்லாம் எம். ஜி. ஆரிடமே இருக்கிறது' என்றுதான் எண்ணிக் கொள்வார்கள்!

எப்போதும் குதர்க்கமாகக் கருத்துக்களை எடுத்து வைப்பதில் எங்களையெல்லாம் வெல்லக்கூடியவர் பக்தவத்சலம்; ஆகவே வெகு ஜாடையாக அப்படிக் குறிப்பிட்டிருக்கிறார்!

'ஒரு தோற்றம்தான் அது' என்று அவர் கூறியிருப்பதை யாரும் நம்பவில்லை; 'அந்தத் தோற்றம், மித்திரன்—இந்து—நவசக்தி—இந்தியன் எக்ஸ்பிரஸ்—தினமணி போன்ற பத்திரிகைகளில் வருவதே தவிர—ஏட்டிலே இருக்கிற தோற்றமே தவிர—நாட்டிலே இருக்கின்ற தோற்றமல்ல என்பதைப் பக்தவத்சலம் ஒப்புக்கொண்டதற்கு நன்றி!"

நீதிவளையா செங்கோல்தான்—நாவலரிடம் இருப்பது!

கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"காஞ்சிபுரத்தில் நான் உள்ளம் உருகச் சொன்னேன்—ஏற்பட்டுள்ள நிலைமையை எதிர்க் கட்சிக்காரர்கள் பயன்படுத்திக் கொள்கிறார்கள்; எம். ஜி. ஆர். அவர்களே—25-ந் தேதி வரையில் உங்களுக்குக் கெடு இருக்கிறது; எனவே, 'எதிர்க் கட்சிக்காரர்கள், இந்த நிலைமையைப் பயன்படுத்திக் கொள்வார்கள் என்று எனக்குத் தெரியாமல் போய்விட்டது; இன்று பயன்படுத்திக் கொண்டுவிட்டார்கள்; நான் சனநாயகத்திற்குக் கீழ்ப்படிகிறேன்—பொதுக் குழுவை மதிக்கிறேன்—வருந்துகிறேன்—என்று சொல்ல உங்

(4-ம் பக்கம் பார்க்க)

பொதுச்செயலாளர் நாவலர் கண்டனம்

முன்னுக்குப் பின் முரணாகப் பேசுகிறார் எம். ஜி. ஆர்.

அன்று சொன்னதை இன்று மறந்து நேர்மையிலிருந்து தவறுகிறார்

பிறருக்கு ஒரு நியாயம்—தனக்கு மட்டும் வேறா?

கோவை, அக். 24—

'எதிர்ப்புக்கள் எங்களுக்கும் புதிது அல்ல; 'குழப்பங்களை உண்டாக்குவதன் மூலம் கழகத்தை அழித்துவிடலாம் – ஒழித்துவிடலாம்' என்று பகற்கனவு காணாதீர்கள்!

எத்தனையோ தலைவர்களையும் – தொண்டர்களையும் இழந்துதான் கழகம் இந்த அளவுக்கு வளர்ந்திருக்கிறது என்பதை மறந்துவிடாதீர்கள்! நாளை இதே இடத்தில் எம். ஜி. ஆர். பேசலாம்; அப்போது இந்த நிலை ஏற்பட்டால் எப்படியிருக்கும்?

1961-ல் சம்பத் வெளியேறியபோதும் கழகம் கவலைப்படவில்லை; சம்பத் வெளியேறியது குறித்து 14-2-1961-ல் எம். ஜி. ஆர். ஒரு அறிக்கையைவிட்டார்; அந்த அறிக்கையில் அவர் என்ன கூறியிருந்தார் தெரியுமா –

"ஒரு தாய் தனது பிள்ளைகளுக்கிடையே வேறுபாடு காட்டி – ஒரு பிள்ளைக்கு மட்டும் சாதகமாக நடந்துகொள்வதாக ஏதாவது ஒரு பிள்ளை கருதினால், அதைத் தாயிடம் எடுத்துக் காட்டி வாதாடி நியாயம் பெற முயற்சிப்பதுதான் ஒழுங்கே தவிர, வீட்டைவிட்டு வெளியே வந்து – தாயின்மேல் உள்ள கோபத்தால், 'தாய் விபச்சாரியாகி விட்டாள்' என்ற குற்றச்சாட்டை ஒரு மகன் சுமத்தினால், அவனோடு உடன் பிறந்தவர்களும் – மற்றவர்களும் பதில் பேசாதிருப்பார்களா? உலகம்தான் அதை ஒப்புக்கொள்ளுமா?"

அவ்வாறு அறிக்கைவிட்ட எம்.ஜி.ஆர். இன்றையதினம் முன்னுக்குப்பின் முரணாகப் பேசுகிறார்!

சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த அவைத் தலைவர், 'எம். ஜி. ஆர். வருமான வரி கட்டவில்லை' என்ற குற்றச்சாட்டை, கழகத் தலைவர் – பொதுச்செயலாளர் முன்னனுமதி பெறாமல் ஒரு மாலை பத்திரிகைக்கு அனுப்பிவிட்டார்; ஆனால், எதிர்பாராத வகையில் [illegible] கிடைத்துவிடவே செயற்குழுவில் அதுபற்றி [illegible]டோம்; அவர் அதை ஒப்புக்கொண்டதுடன், ம[illegible]கேட்டுக் கொண்டார்.

ஆனால் [illegible] ஆர். அதை ஏற்காமல், 'அவர்மீது நடவடிக்கை எடுக்க[illegible]டும்' என்றார்; அதன்படி அவரை ஐந்தாண்டுகள் விலக்கிவைத்தோம்.

இப்போது எம்.ஜி.ஆர். நிலை என்ன? – நாம் அவரை மன்னிப்புக் கேட்கச் சொல்லவில்லை—வருத்தம்தான் தெரிவிக்கச் சொன்னோம்; அதை ஏற்காமல் தனிக் கட்சி தொடங்கியிருக்கிறார்!"

—கோவை பொதுக்கூட்டத்தில்

ஆர்ப்பரிப்புக்கு அஞ்சோம்

[★]

எத்தகைய சோதனைகள் ஏற்பட்டாலும் வெல்வோம்

கழகத்தைக் கட்டிக் காப்பதற்குச் சூளுரைப்போம்

சென்னை, அக். 24—

★ அறிஞர் அண்ணா அவர்கள் அமைத்த இந்தக் கழகத்தையும — இந்த அரசையும் அழித்து விடுவோம் என்ற ஆர்ப்பரிப்பு முழக்கம் கேட்கிறது ; நாம் இதைக்கண்டு அஞ்சியவர்கள் [illegible] அண்ணா அவர்களது வழியில் கடமை — கண்[illegible]ட்டுப்பாடு நெறி காத்துக் கழகத்தைக் கட்[illegible]ம் என்ற சூளுரையை ஒவ்வொருவரும் எடு[illegible]ள்ள வேண்டும்.

★ அறிஞர் அண்ணா [illegible] கழகம், ஏழை எளியவர்களுக்காக—பாட்டாளி மக்களுக்காகப் பாடுபடுவது ; அவர் அமைத்த இந்தக் கழகத்தை நீங்கள் ஆட்சிப் பீடத்தில் அமர்த்தியிருக்கிறீர்கள். அறிஞர் அண்ணா இந்த ஆட்சியை எங்களிடம் ஒப்படைத்துவிட்டுச் சென்றிருக்கிறார்கள் ; அவரது வழியில் ஏழை எளியவர்களுக்காக இந்த அரசு பாடுபட்டு வருவதை நீங்கள் அறிவீர்கள் ; இதைக் காப்பாற்றித் தீரவேண்டியது உங்களது கடமையாகும்.

★ தேர்தல் காலங்களில் உங்களிடத்திலே விறுவிறுப்பையும், உற்சாகத்தையும் கண்டிருக்கிறேன் ; அப்போது தான் இதுபோலப் பட்டிதொட்டிகளிலும்—வீதிகளிலும் திறந்த வேனில் நின்றவாறு பேசியிருக்கிறேன் ; ஆனால் அதைவிட உற்சாகத்துடன் நீங்கள் காட்டும் இந்த ஆர்வத்தையும் துடிப்பையும் காண்கின்றபோது, 'கழகத்திற்கு எத்தகைய வேதனைகள் வந்தபோதும் கவலையில்லை — வெற்றிபெறுவோம் — துவளாமல் துயர்படாமல் கழகத்தைக் கட்டிக் காப்போம்' என்ற உறுதியைப் பெற முடிகிறது !

★ நீங்கள் காட்டும் இந்த உற்சாகத்தைக் காணுகின்றபோது, அண்ணா அவர்களின் மோகனப் புன்சிரிப்பு தான் எனது நினைவுக்கு வருகிறது ; இந்த உற்சாகம்... இந்த உணர்வுகள் உள்ளவரையில் எவரும் நம்மை அசைக்க முடியாது ! எத்தகைய சோதனைகள் வந்தபோதிலும் வெல்வோம் ! கழகத்தைக் காப்போம் !

★ கண்ணீரும் செந்நீரும் சிந்தி வளர்த்த கழகத்தை ஒற்றுமையாக இருந்து கட்டிக் காத்திடவேண்டும். 'இந்தக் கழகத்தை எதிரிக்கு காட்டிக் கொடுத்துவிட மாட்டோம்' என்ற நம்பிக்கையில் தான் இந்த ஆட்சியை நம்மிடம் ஒப்படைத்துவிட்டு அண்ணன் நீலத் திரைக்கடல் ஓரத்தில் நித்திரை புரிகின்றார் ! ஆகவே அண்ணா அமைத்தக் கழகத்தைக் கட்டிக்காப்போம் !

—சென்னையிலிருந்து மதுராந்தகம் செல்லும் வழியில், ஆலந்தூர்—மீனம்பாக்கம் — பல்லாவரம் — தாம்பரம் பகுதிகளில் மக்களின் உற்சாகமிக்க வரவேற்புகளில் ஆற்றிய உரையில்.

இலங்கைத் தமிழர்களுக்கு மிரட்டல்?

கொழும்பு, அக். 23—

இலங்கையின் புதிய அரசியல் சட்டத்தை எதிர்த்துத் தமிழர்கள் உரிமைப் போர் நடத்துகின்றனரல்லவா ? இந்தப் போராட்டம் பற்றி இலங்கைத் தலைமையமைச்சர் திருமதி சிரிமாவோ கூறியிருப்பதாவது :—

"பொருளாதாரத் துறையில் இலங்கை மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்ற இந்த நேரத்தில், பொறுப்புக்களை உணர்ந்த தமிழர் தலைவர்கள் இப்படிப் போராட்டம் நடத்துவது நல்லதல்ல; ஒற்றுமை தேவையான இந்த நெருக்கடி நேரத்தில் பிரிவினை பேசுவது பொறுத்துக் கொள்ள முடியாததாகும்; எனவே, தமிழர்களின் போராட்டத்தை எப்படியும் அடக்கியே தீருவேன்; இதற்காக அரசாங்க அதிகாரம் முழுவதையும் பயன்படுத்துவேன் என்று எச்சரிக்கிறேன்."

ஏற்கனவே, தமிழர்கள் அதிகம் வாழும் பகுதிகளில் காவல் துறையினரும்—இராணுவத்தினரும் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றனர்.

சொந்த வீடு என்பதால்சுவரில் கிறுக்கி தள்ள எவருக்கும் உரிமை இல்லை

பத்திரிகைகள் எழுப்பும் பரபரப்பைச் சற்றுப் பொறுமையுடன் தாங்கிக் கொள்ள வேண்டும்

"எக்குற்றமாயினும் — குறையாயினும், அதனைப் போக்கிட நடவடிக்கை உரிய நேரத்தில் எடுக்கப்பட்டே வருகிறது.

கட்சி தூய்மைப்பட வேண்டுமென்று தெருவிலே நின்று புழுதிவாரி வீசுவோரைப் பற்றி நமது அண்ணன் கூறிய உருக்கமிகு கருத்துக்களை உனக்கு நினைவூட்டுகிறேன்.

'திராவிட நாடு' இதழில் — தம்பிக்கு எழுதிய மடலில் நமது அண்ணன் குறிப்பிடுகிறார் — படித்துப் பார் — எவ்வளவு ஆழமான துயரத்தோடு கடிதம் வரைகிறார் என்பதை !

அருமை நண்பர் சம்பத், கழகத்தின் கணக்கு வழக்குகள் — அண்ணாவின் சனநாயகம் ஆகியவை பற்றி எழுதியும் — பேசியும் — கழகத்தைச் சோதனைக்கு ஆளாக்கிவிட்டுப் போன நேரத்தில் அண்ணா எழுதிய கட்டுரை அது :—

"தம்பி ! கட்சி நல்ல முறையிலே — எவருடைய மனதுக்கும் குறையின்றி நடத்திச் செல்லப்பட வேண்டுமேன்பதிலே எனக்கு இருப்பதுபோன்றே மக்களுக்கும் நிரம்ப அக்கறை இருக்கிறது.

"ஆனால் கட்சியின் நடைமுறையில் குறை இருப்பதைக் கண்டு குமுறியோ — கொதித்தோ, 'அதை நீக்குவதற்கு உள்ள வழிபற்றித் தாம் கொண்டுள்ள கருத்தன்றி வேறெவர் கருத்தும் மேலானதுமல்ல — தேவையானதுமல்ல' என்று எண்ணிக் கொண்டும், குறைகளை வேண்டுமேன்றே குவித்து வைத்துக்கொண்டு, 'யாரோ சிலர் பயன் அடைகிறார்கள்' என்று தாமாகக் கருதிக் கொண்டுமே, அச்சம் — தயை — தாட்சண்யமின்றிப் பேசுவதாகவும் எழுதுவதாகவும் கருதிக்கொண்டு தம்மை ஒத்தவர்களை — கட்டுத் தோழர்களைப் பற்றிக் கேவலமான கருத்துக்களைப் பரப்புவதும், 'காதைப் பிடித்திழுத்துக் கன்னத்தில் அறைந்து தலையில் குட்டினாலன்றி, மர மண்டைக்குப் புத்தி வரவே வராது' என்று எண்ணிக் காட்டுப்போக்கில் நடந்துகொள்ளும் பழங்கால ஆசிரியர்களைப்போல், 'இடித்து இடித்துச் சொன்னாலன்றி இவர்கள் திருந்தமாட்டார்கள்' என்று கருதும் போக்கை மேற்கொண்டும் நடந்துவருவது, கசப்பு உணர்ச்சி பரவும் — பகை உணர்ச்சியாகிவிடவும் — எதிர்ப்பாளர்களுக்கு நம்மையும் அறியாமல் உடந்தையாகவும்தான் பயன்படுமே தவிர, திருத்தம் கிடைத்திட வழிகோலாது."

அண்ணன், எவ்வளவு தெளிவாகச் சொல்லி விட்டுப் போயிருக்கிறார் பார்த்தாயா? 'சம்பத் விஷயம் வேறு — இப்போது நடக்கும் விஷயம் வேறு' என்று சிலர் வாதிடக்கூடும் ; ஆமாம் — நண்பர் சம்பத்கூட இவ்வளவு பயங்கரமாகக் கழகத்தின்மீது பாய்ந்திடவில்லை !

அப்போது ஒரே ஒரு இடத்தில்தான் அண்ணா படம் உடைக்கப்பட்டது ; இப்போது அந்த அண்ணன் வளர்த்த தம்பிக்கு எவ்வளவு பெருமை பார் — செருப்பு மாலைகூடப் போடுகிறார்கள் ரசிகச் செல்வங்கள் என் படத்துக்கு !

அன்றைக்கு சம்பத் 'கட்சியைத் திருத்தப்போகிறேன்' என்று சொல்லித்தான் கிளம்பினர் ; 'கொள்கையில் மாற்றமில்லை' என்றுதான் முரசு கொட்டினர் ; புதுக்கட்சி தொடங்கி — புதிய கொள்கைகளை அறிவித்தார் ; அந்தக் கட்சியின் சார்பில தேர்தலிலேகூட போட்டியிட்டார்.

தென் சென்னை நாடாளுமன்றத் தேர்தலில் அவர் போட்டியிட்டபோது, அவருக்கு அகில இந்திய விளம்பரம் தரப்பட்டது ; அந்த விளம்பரத்திற்குத் தகுதியான அளவுக்கு அவர் அரசியல் அறிந்தவர் என்பதை நான் மறுக்கவில்லை.

அவரை எதிர்த்துப் போட்டியிட்ட நமது நண்பர் நாஞ்சில் மனோகரன் அவர்கள், தோழர் சம்பத்தைப் பற்றிக் குறிப்பிட்ட வாசகங்கள், நாட்டு மக்களைக் கவர்ந்தன ;—

"சொந்த வீடு என்பதற்காகச் சுவரில் கிறுக்கித் தள்ள எவனுக்கும் உரிமை இல்லை"

என்பதுதான் அந்தச் சூடான — ஆனால் உண்மையைச் சுட்டிக்காட்டிய வாசகம் !

சொந்த வீட்டைப் பழுதுபார்ப்பதாகச் சொல்லி இருந்த எழிலையும் குலைக்க முனைந்து — பிறகு புதிய வீடுகட்டிக் கொஞ்ச நாள் குடியிருந்து பார்த்து—இறுதியில் எதிர்த்த வீட்டுக்கே போய்விட்டார் தோழர் சம்பத் என்பது பழைய கதை !

அதற்கும், இப்போது இதுவரையில் நடந்திருப்பதற்கும் எந்த வேறுபாடும் — முரண்பாடும் எனக்குத் தெரியவில்லை !

இருப்பினும், பத்திரிகைகள் எழுப்பும் பரபரப்பை சற்றுப் பொறுமையுடன் நீயும் நானும் தாங்கிக் கொள்ளத்தான் வேண்டும் !"

—கழகத் தலைவர் கலைஞர்

வாக்கு அளிக்கும் வயது நிர்ணயம்

மத்திய அரசின் நிலை

புதுடில்லி, அக். 24—

வாக்கு அளிக்கத் தகுதிபெறும் வயதை 21-லிருந்து 18-ஆகக் குறைப்பது சம்பந்தமாக நாடாளுமன்றக் கூட்டுக் குழு செய்த பரிந்துரையை மத்திய அரசு ஏற்காது என்று தெரிகிறது; இந்த யோசனையைத் தேர்தல் கமிஷன் ஆதரிக்காததே இதற்குக் காரணமாகும்.

கூட்டுக் குழுவின் பல்வேறு சிபாரிசுகளைக் குறித்துத் தேர்தல் கமிஷனின் கருத்துக்களை சட்ட அமைச்சகம் கோரியது ; வாக்கு அளிக்கும் வயதைக் குறைப்பதால் ஏற்படும் சிரமங்களைத் தேர்தல் கமிஷன் தனது பதிலில் விளக்கியிருப்பதாகத் தெரிகிறது.

"வாக்கு அளிக்கும் வயதைக் குறைத்தால் உடனடியாக வாக்காளர் எண்ணிக்கை 27·90 கோடியிலிருந்து 31·30 கோடியாக உயரும் ; இதன் விளைவாக, வாக்குச் சாவடிகளின் எண்ணிக்கை 3·42 இலட்சத்திலிருந்து 3·76 இலட்சத்துக்கு உயர்த்த வேண்டியிருக்கும் ; மொத்தம் சுமார் 25 இலட்சம் ஊழியர்கள் தேவைப்படுவர் ; அதிக எண்ணிக்கையில் போலீசாரும் தேவைப்படுவர் ; அத்துடன், அதிக எண்ணிக்கையில் வாக்குச் சீட்டுகளும் — வாக்குப் பெட்டிகளும் — இதர சாதனங்களும் தேவைப்படும் ; வாக்கு அளிக்கும் வயதைக் குறைப்பதால் வாக்கெடுப்புக்கான காலமும், வாக்குகளை எண்ணுவதற்கான காலமும் அதிகமாகும்"

என்று தேர்தல் கமிஷன் எடுத்துக் காட்டியுள்ளது.

"18 லிருந்து 21-வயது வரை உள்ளவர்களுக்கு வாக்கு அளிக்கும் உரிமையை வழங்க மறுப்பதற்கு நியாயமான காரணங்கள் எதுவும் இல்லை ; இதர காரியங்களுக்கு அவர்கள் சட்டப்படி மேஜராகக் கருதப்படுகின்றனர்" என்று கூட்டுக் குழுவில விவாதிக்கப்பட்டது ; இத்தகைய நடவடிக்கை சனநாயக செயல்முறையில் பங்கு கொள்ளும் பொறுப்பு உணர்ச்சி இளைஞர்களுக்கு ஏற்பட உதவும் என்று குழு உறுப்பினர்கள் சிலர் கருதினர்.

நினைவுச் சக்தியை அதிகரிக்க மருந்து

ஜெய்ப்பூர்; அக். 24—

நினைவுச் சக்தியை அதிகரிக்கும் மருந்து ஒன்றைக் கண்டுபிடித்துள்ளதாக இங்குள்ள எஸ். எம். எஸ். மருத்துவக் கல்லூரி நிபுணர்கள் இருவர் கூறினர்.

"அதில், குளுடாமிக் [illegible] முக்கியமாக உள்ளது; [illegible] அதிகம் கவனம் செ[illegible] தன்னம்பிக்கை பெற[illegible] உதவும்" என அவர்கள் [illegible]

புரதசத்தில் உள்ள ஒரு அமி[illegible] அமிலமே, 'குளுடாமிக்' அமிலமாகும்.

டாக்டர் சுப்பராவ், டாக்டர் எம். எல். குப்தா ஆகியோர் அந்த இரு நிபுணர்களாவர்.

கலப்பட எண்ணெயால் ஏற்பட்ட கொடுமை

கல்கத்தா, அக். 24—

கல்கத்தாவின் வடக்கு சுற்றுப் புறப் பகுதியான டம்டம்மில் கலப்படம் செய்யப்பட்ட கடுகு எண்ணெய்யை உட்கொண்டதால் இது வரை மொத்தம் 400 பேருக்கு முடக்குவாதம் வந்துள்ளது" என்று அதிகாரி ஒருவர் கூறினர்.

அவர்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்காக அங்குள்ள சிகிச்சை நிலையம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது.

கடமையை மதிப்பது அவசியம்

போலீசுக்கு நல்லுரை

கடமையாற்றுகையில் உயிர் துறந்த போலீசாரின் நினைவுக்கு மரியாதை செலுத்துவதற்காகச் சென்னையில் போலீசாரின் சிறப்பு அணிவகுப்பு நடந்தது.

தமிழ்நாடு போலீசு இன்ஸ்பெக்டர் — ஜெனரல் எப். வி. அருள் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்.

1972-ம் ஆண்டில் 391 போலீசார் கடமை ஆற்றுகையில் உயிர் துறந்தனர் ; 1971-ம் ஆண்டில் 345 பேர்தான் மாண்டனர்.

போலீசு அணிவகுப்பில் ஐ. ஜி. அருள் உரையாற்றுகையில், 'கடமையையே பெரிதாக மதித்துப் பணியாற்றிடப் போலீசார் மீண்டும் தங்களை அர்ப்பணித்துக் கொள்ளவேண்டும்' என்று கேட்டுக் கொண்டார்.

"வன்முறையைக் கட்டுப்படுத்தவும் — சட்டத்தை நிலைநிறுத்தவும் போலீசார் சில நேரங்களில் கடுமையாக நடந்துகொள்ள வேண்டியிருக்கிறது" என்று அவர் குறிப்பிட்டார்.

"போலீசார் தங்கள் கடமையை நிறைவேற்றப் போற்றுதற்குரிய தியாகங்களைப் புரிந்துள்ளனர் ; மற்றவர்களுக்கு இது எடுத்துக்காட்டாக இருக்கும்" என்று அவர் சுட்டிக் காட்டினர்.

தாழ்த்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்

சத்தியவாணிமுத்து நிகழ்ச்சிகள்

அக். 25 காலை 8·30 மணி : மாயூரம்—தம்பி தேவேந்திரன் திருமண நிகழ்ச்சியில் கலந்து கொள்ளுதல் ; மாலை 5·30 மணி : செம்பனார் கோவில்—அறிஞர் அண்ணா திருமண மண்டபத்திற்குக் கால்கோள் விழாவில் பங்கு பெறுதல் ; இரவு 8 மணி : குத்தாலம்—பொதுக் கூட்டத்தில் பேசுதல்

'வன்முறைச் செயலை மக்கள் மன்னிக்க மாட்டார்கள்'

'அமைதியைக் கெடுக்க முனைந்தால் அதற்குரிய பலனை எவரும் அனுபவித்தே தீரவேண்டும்'

சட்ட அமைச்சர் செ. மாதவன் கடும் எச்சரிக்கை

காரைக்குடி, அக். 23—

"நிலைமையை விளக்கத் தி. மு. கழகம் மக்கள்முன் வருகிறது ; ஆனால் ஒட்டுக் காங்கிரசார் என்ன செய்கின்றனர் — 'மக்கள் முன் வருவேன்' என்று கூறிய எம் ஜி. ஆர்., மக்களுக்கு எதிராக வன் முறையைத் தூண்டிவிடுவதேன் ?

"மக்களைச் சந்தித்துச் சொல்லவேண்டிய கருத்துக்களை எடுத்துச் சொல்ல வேண்டுமே தவிர, குழப்பம் செய்வது — கலவரங்களைத் தூண்டுவது நல்லதல்ல !

"அறிஞர் அண்ணாவின் பெயரைச் சொல்லிக்கொண்டு பஸ்களை எரிப்பதும் — கார்களை மறிப்பதும் — கலவரம் செய்வதும் எந்த வகையில் நியாயம் ?

"அறிஞர் அண்ணா அவர்கள், இத்தகைய வன்முறையை ஒரு போதும் மன்னிகக மாட்டார்கள் ; 'வன்முறையில் இறங்குபவன் என் தம்பி ஆகான்' என்று சொன்னதை மறந்துவிட்டார்களா ?

"கலவரத்தை ஏற்படுத்தி நாட்டின் அமைதியைக் கெடுப்பதன் மூலம்தான் கட்சியை வளர்க்க முடியும் என்று அவர்கள் கருதுவார்களானால், உறுதியாகச் சொல்வேன் — நாட்டு மக்கள் மன்னிக்க மாட்டார்கள் !

"இலட்சோபலட்சம் தி. மு. கழக இலட்சிய வீரர்கள் அமைதியாக இருப்பதை, 'கோழைத்தனம்' என்று எண்ணிப் பலாத்காரத்தில் இறங்க முனைந்திருக்கின்றனர் ; அண்ணன் காட்டிய வழியில் எதையும் தாங்கும் இதயத்துடன் இருக்கின்ற கொள்கை வீரர்களின் இதயத்தில் வேல்பாய்ச்ச முனைகின்றனர் ; 'சாதுமிரண்டால் காடு கொள்ளாது' என்பார்கள் ; அதை மறந்துவிடக் கூடாது"

என்று அமைச்சர் செ. மாதவன் அவர்கள், காரைக்குடி காந்தி சதுக்கத்தில் நடைபெற்ற கழகப் பொதுக்கூட்டத்தில் சுட்டிக்காட்டிக் குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில் மதுரை மேயர் எம்.எல்.சி., தா. கிருட்டினன் எஸ். முத்து, எஸ். எஸ். கிருஷ்ணன் எம்.பி., சித. சிதம்பரம் எம் எல் ஏ. பெரி. சண்முகம் எம்.எல் ஏ, குறள்பித்தன ஆகியோர் பேசினர்.

பின்னணி என்ன என்பது எங்களுக்குத் தெரியும்—மக்களும் அதனை உணர்ந்திருக்கின்றனர்

பின்னர், திருப்பத்தூரில் — வட்டச் செயலாளர் பெரி. அழகு தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் அமைச்சர் மாதவன் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

'காரைக்குடியிலிருந்து நான் இங்கு வருகிறபோது என் கார்மீது கல் வீசினர்கள் ; 'கல் வீசிக் குழப்பம் செய்தால் — பஸ்களை எரித்தால் தடியடி — துப்பாக்கிப் பிரயோகம் நடக்கும் ; கழக அரசுக்குக் கெட்ட பெயர் ஏற்படும் ; மக்கள் வெறுப்பார்கள்' என்று அவர்கள் நினைக்கிறார்கள் ; ஆனால் மக்கள் அவர்களுடைய நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனிக்கிறார்கள் ; அவர்களை ஏமாற்றிவிட முடியாது.

இதற்கெல்லாம் பின்னணி என்ன என்பது எங்களுக்குத் தெரியும் ; தூண்டிவிடுபவர்கள் யார் என்பதையும் நாங்கள் அறிவோம் ; என்ன நடக்கப்போகிறது என்பதையும் நாங்கள் தெரிந்துதான் வைத்திருக்கிறோம் ; அதை மக்கள் வெளிப்படையாக உணரத்தான் போகிறார்கள்.

கழகத் தோழர்கள் இந்த நேரத்தில் எதையும் தாங்கும் இதயத்துடன் பொறுமையாக இருக்க வேண்டும் ; கடமை உணர்ந்து, கழகத்தின் கண்ணியத்தைக் காத்திடக் கட்டுப்பாட்டுடன் செயல்பட வேண்டும்."

'அவர்களை மிக நன்றாக நமக்கு அடையாளம் தெரியும்'

'சேரிடம் அறிந்து சேர் என்பதை புரிந்துகொள்ள இயலாதவர்கள்'

திருச்சி, அக். 21—

அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் சீரங்கம் கூட்டத்தில் பேசுகையில் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"சனநாயகம் காப்பாற்றப்படுவது தமிழகத்திலேதான்—என்று உலகமே சொல்கிறது ; அப்படிப்பட்ட தமிழகத்தின் முதலமைச்சர் கலைஞர் அவர்களைத்தான், 'சர்வாதிகாரி' என்று வர்ணிக்கிறார் எம். ஜி ஆர்.

காமாலைக் கண்ணனுக்கு கண்டதெல்லாம் மஞ்சல் அல்லவா ?

'அண்ணா தி.மு.க.' அல்ல அவர்கள் ஆரம்பித்திருப்பது — 'ஆண்டி' (எதிர்ப்பு) தி மு.க. தான் அது !

சில எம். எல். ஏ.-க்கள் அவர்கள் பக்கம் சேர்ந்துவிட்டார்களாம் ; 'சேரிடம் அறிந்து சேர்' என்பதைப் புரிந்துகொள்ளாத அவர்களை நமக்கு மிக நன்றாக அடையாளம் தெரியும்."

காட்டு வளங்களை விரிவுபடுத்தினல் தொழில் வளத்தைப் பெருக்க இயலும்

20,000 பேருக்கு வேலை வாய்ப்பு ஏற்படும்

தமிழக அரசின் பரிசீலனைக் குழு விளக்கம்

சென்னை, அக். 23—

"தமிழ்நாட்டிலுள்ள காடுகளை விரிவுபடுத்தி அதன் மூலம் வேலைவாய்ப்பை உருவாக்குவது பற்றித் தமிழ்நாடு திட்டக் குழு உறுப்பினர் டாக்டர் மால்கம் ஆதிசேசையா தலைமையிலான குழு ஒன்று பரிசீலனை செய்து திட்டம் ஒன்றைத் தீட்டியிருக்கிறது ; இந்தத் திட்டங்கள் அடங்கிய அறிக்கையை டாக்டர் மால்கம் ஆதிசேசையா முதலமைச்சரிடம் அளித்தார்.

இதுபற்றித் தமிழ்நாடு திட்டக் குழுத் துணைத் தலைவர் எம். ஜி. இராசாராம் நிருபர்களிடம் கூறியதாவது:—

தமிழ்நாட்டில் தொழில் வளம் பெருகுவதற்கு ஏற்பக் காடுகளை விரிவாக்கும் திட்டம் தீட்டப்பட்டுள்ளது ; ரூ. 28 கோடி செலவில் தீட்டப்பட்டுள்ள இந்தத் திட்டம் 12 ஆண்டுக் காலத்தில் நிறைவேற்றப்படும்.

காடுகளில்—காகிதம் தயாரிப்பதற்குப் பயன்படும் மரங்களையும் மற்றும் தொழிற்சாலைகளுக்குத் தேவையான தேக்கு போன்ற மரங்களையும் அதிகமாகப் பயிரிட வேண்டும்.

இப்போது தமிழ்நாட்டிலுள்ள காட்டுப் பகுதிகள் 12 ஆண்டுகளில் மேலும் விரிவுபடுத்தப்படும்.

காடுகளை விரிவுபடுத்துவதன் மூலம் தொழில் வளத்திற்குத் தேவையான மூலப் பொருள்கள் அதிகமாகக் கிடைக்க வாய்ப்பு ஏற்படும் ; இதன் மூலம் தொழில் வளத்தைப் பெருக்க முடியும்.

தோட்டப் பயிர்கள் உற்பத்தி செய்யத் திட்டம்

இது தவிர, தேயிலை—காபி—ரப்பர் போன்ற தோட்டப் பயிர்களை உற்பத்தி செய்வதற்காக ரூ. 3·73 கோடி செலவில் திட்டமிடப்பட்டுள்ளது ; இதன் மூலம், தமிழ்நாட்டுக்கு வரும் இலங்கைத் தமிழர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும்.

சுற்றுலாவின் வளர்ச்சியையொட்டிக் கோவை மாவட்டத்தில் வன விலங்குகளுக்காக மூன்று புகலிடங்களை ஏற்படுத்த வேண்டும்.

இது தவிர, முந்திரிப் பழத்திலிருந்து ஒருவகை மது தயாரிப்பதற்காகத் தனித் தொழிற்சாலை ஒன்றும் சந்தனத் தைலம் தயாரிப்பதற்காக ஒரு தொழிற்சாலையும் அமைக்க வேண்டும்.

காட்டு வளத்தை எப்படி விரிவுபடுத்துவது—பாதுகாப்பது எப்படி என்பது பற்றி அதிகாரிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட வேண்டும் ; அதுபற்றி ஆராய்ச்சி நடத்தவும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

தொழில் வளத்திற்கு அடிப்படையான இந்தக் காட்டு வளப் பகுதியை நல்ல முறையில் மேற்பார்வையிடுவதற்காகவும்—மேம்பாடு செய்வதற்காகவும் தனி நிறுவனம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும்.

இது தவிர, தமிழ்நாட்டிலுள்ள 8 முக்கிய அணைக்கட்டுகளில மண் அரிப்பைத் தடுப்பதற்காக ரூ. 2 கோடி செலவிடத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

வேலை வாய்ப்புக்கு வழிகோலும்

1972—73-ம் ஆண்டில் தொடங்கப்படும் இந்தத் திட்டம், 1983—84-ம் ஆண்டில் முடிவடையும் ; இந்தத் திட்டம் முடிவடைந்தால், இப்போது காடுகளிலிருந்து அரசாங்கத்திற்குக் கிடைக்கும் வருமானத்தைப் போல் இரண்டு மடங்கு வருமானம் கிடைக்கும்.

இதன் மூலம் மொத்தம் ஏறத்தாழ 20,000 பேர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும்."

சென்னையில் 1,792 பேர்களுக்கு அறுவைச் சிகிச்சை

சென்னை, அக். 23—

சென்னை — நுங்கம்பாக்கம் மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிக்கூடத்தில் இலவசக் கண் சிகிச்சை முகாம் நடைபெற்று வருகிறது ; கடந்த 18-ந் தேதி, இந்த முகாம் தொடங்கியது.

கண் மருத்துவமனை சூப்பிரண்டெண்டு டாக்டர் ஆபிரகாம் தலைமையில் டாக்டர்கள் பலர் இந்த முகாமில் சிகிச்சை அளித்து வருகின்றனர்.

நவம்பர் 5-ந் தேதி முடிய இந்தச் சிகிச்சை முகாம் நடத்தப்படும்.

முகாம் தொடங்கிய மூன்று நாட்களில், 1,792 பேர்களுக்குச் சாதாரணக் கோளாறுகளுக்காக சிகிச்சை அளிக்கப்பட்டது ; இவர்களில் 942 பேர் ஆண்கள் — 850 பேர் பெண்கள்.

அதிகமாகக் கண் பழுதடைந்த 173 பேருக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது.

சிகிச்சை பெறுபவர்களுக்கு இலவச உணவு — படுக்கை வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

சித்த மருத்துவ வசதி

தாலுகா மருத்துவமனையில் ஏற்படுத்தப்படும்

அமைச்சர் க. அன்பழகன் தரும் தகவல்

திருச்சி, அக். 24—

"முதலில் எல்லா தாலுகா மருத்துவமனைகளிலும் சித்த மருத்துவம் செய்வதற்கு வசதி செய்ய அடுத்த வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்படும் ; பின்னர், ஊராட்சி ஒன்றிய மருத்துவமனைகளில் இவ்வசதி செய்யப்படும்"

என்று மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள், இங்கு தலைமை மருத்துவமனையில் சித்த மருத்துவ வார்டுக்கு அடிக்கல் நாட்டிப் பேசுகையில் தெரிவித்தார்.

பின்னர் மாவட்ட மருத்துவமனையில் கண் சிகிச்சை முகாம் ஒன்றைத் துவக்கிவைத்தார்.

"இருதய அறுவைச் சிகிச்சை வார்டு ஒன்று கட்ட மாவட்ட நல நிதியிலிருந்து ரூ. 60,000 ஒதுக்க வேண்டும்" என்று விவசாய அமைச்சர் தர்மலிங்கம் கேட்டுக் கொண்டார்."

அமைச்சர் க. அன்பழகன் அவர்களுக்கு திருச்சி நகராட்சி வரவேற்பு அளித்தது.

குசராத் பல்கலைக் கழகத்தில் தமிழ் ஆராய்ச்சிப் பிரிவு

ஆளுநர் ஷா தகவல்

தஞ்சை, அக். 27—

"குசராத்திலுள்ள பல்கலைக் கழகம் ஒன்றில் தமிழ் மொழி ஆராய்ச்சிப் பிரிவு ஒன்றைத் தோற்றுவிக்குமாறு நான் விடுத்த வேண்டுகோளை குசராத் அரசு பரிசீலித்து வருகிறது"

என்று தமிழ்நாடு ஆளுநர் கே. கே. ஷா, இங்கு நிருபர்களிடையே பேசுகையில் தெரிவித்தார்.

"தமிழ்நாட்டில் குசராத் மொழிக்கு ஆராய்ச்சிப் பிரிவு ஒன்றை ஏற்படுத்துமாறு முதலமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்திருக்கிறேன் ; விரைவில் நிறுவப்படும் என்று நம்புகிறேன்" என்றும் அவர் கூறினர்.

சரசுவதி மகால் நூல் நிலையத்துக்கும், இந்திய மருத்துவ ஆராய்ச்சிப் பிரிவுக்கும் அவர் சென்றிருந்தார்.

சிவகாசி தி.மு.க. செயலாளர் மறுப்பு-அறிவிப்பு

சிவகாசி தி மு.க. செயலாளர் எஸ். அண்ணாமலை அறிவிப்பதாவது :—

"சிவகாசி நகரில் 17—10—72-ல், 'எம்.ஜி.ஆர். ஆதரவாளர்கள்' என்ற பெயரில் ஊர்வலமும் — கூட்டமும் ஏற்பாடு செய்து, என்னுடைய தலைமையில் கூட்டமும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்ததை, நான் வெளியூருக்குச் சென்று திரும்பியதும் அறிந்தேன்.

வேண்டுமென்றே சிலர் என்னுடைய பெயரையும், நகர — தி மு. கழகத்தையும் தொடர்புபடுத்தியிருப்பது தவறானதாகும் ; நகர தி மு. கழகம் என்றும்போல் தலைமைக் கழகத்திற்குக் கட்டுப்பட்டுச் செயல்படும் என்பதைத் தெரியப்படுத்திக் கொள்கிறேன். தலைமைக் கழகத்தின் ஆணைப்படி, நவம்பர் 5ம் நாளன்று பொதுக்குழு விளக்கப் பொதுக் கூட்டம் நடைபெறும்."

அமைதிக்குக் குந்தகம் விளைவிக்க முனைவோர்...

‘கடும் நடவடிக்கைகள் மூலம் அடக்கப்படுவர்’

நக்சலைட்டுகளைவிடத் தீவிரமாகக் கண்காணிக்கப்பட வேண்டியவர்கள்

முதலமைச்சர் கலைஞர் இறுதி எச்சரிக்கை

சென்னை, அக். 23—

!! வன் முறைகளின் மூலம் தமிழ்நாட்டில் சட்டம்--ஒழுங்கு--அமைதிக்குக் குந்தகம் விளைவிக்க முனைகிறவர்கள், கடுமையான நடவடிக்கைகளின் மூலம் அடக்கப்படுவார்கள்; இவர்கள் நக்சலைட்டுகளைவிடத் தீவிரமாகக் கண்காணிக்கப்பட வேண்டியவர்களாகிவிட்டார்கள்.

!! ஒரு கூட்டத்தில் பத்துப் பேர் கூடிக் கல் போடுவதோ -- தொலைவில் இருந்து 20 பேர் கல்லெறிவதோ அவர்கள் சார்ந்திருக்கின்ற கட்சியின் பலத்தைக் காட்டிவிடுவது ஆகாது.

!! அமைப்பு முறையிலே உருவாக்கப்பட்டு -- அமைப்பு முறையிலே வளர்ந்து -- அமைப்பு முறையிலே இயங்கிக் கொண்டிருக்கின்ற பல்லாயிரக்கணக்கான தி. மு. கழகக் கிளைகள் -- அதன் சார்பு மன்றங்கள் ஆகியவற்றில் இருக்கின்ற முன்னேற்றக் கழகத் தோழர்களின் கட்டுப்பாட்டு உணர்ச்சியை இதுபோன்ற வன்முறைச் சக்திகள் மிரட்டி அழித்துவிட முடியாது”

என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள், நேற்று செய்தியாளர்களிடம் தெளிவுற விளக்கிக் கூறினர்.

செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளும் -- முதலமைச்சர் அளித்த பதில்களும் வருமாறு:—

கேள்வி:—“ கடந்த இரண்டு மூன்று நாட்களாக மாநிலத்தின் பல பகுதிகளில் அமைதிக்குப் பங்கம் -- பொதுக்கூட்டங்களில் அமளி -- கல்வீச்சு -- பொதுச் சொத்துக்களுக்குச் சேதம் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றனவே -- இனி மேலாவது இம்மாதிரி அமளிகள் நடைபெறாமல் தடுக்க உறுதியான நடவடிக்கை எடுக்கப்படுமா?”

பதில்:—“ பொதுச் சொத்துக்கள் -- அரசாங்க உடமைகள் பாதிக்கப்படுகின்றன; இவைகளை அசல் தி. மு. கழகத்தினரே செய்கிறார்கள் என்று கற்பனையான குற்றச்சாட்டைச் சுமத்துகிறார்கள்; தி. மு. க.-வினர், அவர்களாகவே அரசு பஸ்களை கொளுத்துகிறார்களா? அவர்களுடைய தலைவர்களுடைய படங்களை அவர்களாகவே கிழிக்கிறார்களா? தமிழகம் முழுவதிலும் நடைபெற்ற பொதுக்குழுத் தீர்மான விளக்கப் பொதுக் கூட்டங்களில் கல்லெறிந்தும் -- குழப்பம் செய்தும் -- கூச்சல் போட்டும் இருக்கிறார்களே -- அவர்களும் திராவிட முன்னேற்றக் கழகத்தினரா?

திருத்தணி பொதுக்கூட்டத்தில, கா. வேழவேந்தன் எம் எல். ஏ. அவர்களின் காரைக் கொளுத்தி அடியோடு நாசமாக்கி இருக்கிறவர்களும் தி. மு. க.-வினர்தானா? திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து பிரிந்து சென்றவர்கள்கூட இதைச் செய்திருக்கமாட்டார்கள்; ‘ரசிகர்கள்’ என்ற பெயரால் உலவும் கழகப் பற்று இல்லாத சிலரும், இப்பிரச்சினையைப் பயன்படுத்திச் சட்டம் -- ஒழுங்கு--அமைதியைக் குலைக்க வேண்டும் என்று திட்டமிட்டிருக்கின்ற ஒரு சில எதிர்க் கட்சிக்காரர்களும்தான் இந்த வன்முறையில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

இதைத் தடுக்கவும், சட்டம் -- ஒழுங்கு -- அமைதியைக் காக்கவும் போலீசார் முயன்றால், உடனே அதை, ‘அடக்குமுறை’ என்று கண்டிக்க சிலர் முற்படுவது விந்தையாக இருக்கிறது!”

கேள்வி:— “ மீண்டும் அமளி -- பொதுச்சொத்துக்களுக்கு நாசம் போன்றவை நடைபெற்றால், அவற்றை ஒடுக்கத் தீவிர நடவடிக்கை எடுக்கும்படி தேவையான உத்தரவு போலீசாருக்கு அளிக்கப்பட்டிருக்கிறதா?”

பதில்:—“ காவல்துறை தலைமை அதிகாரி தக்க நடவடிக்கை எடுப்பார்; அதற்கேற்றபடி அவர்களுக்கு யோசனை கூறப்பட்டிருக்கிறது.”

விலகியவர்கள் நிலைமை

கேள்வி:— “ தி. மு. கழகத்திலிருந்து விலகிய எம்.எல்.ஏ.-க்கள் பற்றிய தகவல், கழகத் தலைமைக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறதா?”

பதில்:—“ இதுபற்றித் தகவல் வரவில்லை.”

கேள்வி:—“ தி. மு. க. சார்பில் தேர்தலில் வெற்றி பெற்ற அவர்கள் இராஜினாமாச் செய்ய வேண்டும் என்று கோரப்படுமா?”

பதில்:— “ கட்சி மாறியவர்கள் தங்கள் பதவியை இராஜினாமாச் செய்ய வேண்டும் என்று மத்திய அரசினரே சட்டம் கொண்டு வரப்போகிறார்களே; ‘இந்தச் சட்டத்தை முன் தேதியிட்டுச் செயல்படுத்தவேண்டும்’ என்று ஏற்கனவே தி. மு. க. சார்பில் கருத்தறிவிக்கப்பட்டிருக்கிறது.”

சுப்பிரமணியம் கூற்றுக்குப் பதில்

கடந்த ஞாயிறன்று கடற்கரைப் பொதுக் கூட்டத்தில பேசிய மத்திய அமைச்சர் சி. சுப்பிரமணியம் தெரிவித்த கருத்துக்களைச் செய்தியாளர்கள், முதல்வரின் கவனத்திற்குக் கொண்டுவந்து கேட்ட போது அவர் கூறியதாவது:—

“ தமிழ்நாட்டில் எந்த சிறு விவகாரம நடைபெற்றாலும், அதில் மத்திய அரசு தலையிடும் என்ற பீதியைக் கிளப்புவதை இங்கிருக்கின்ற ஒரு சில அரசியல வாதிகளும் -- ஒரு சில அரசியல் வாதிகளும் -- ஒரு சில பத்திரிகைகளும் வாடிக்கையாகக் கொண்டிருக்கிறார்கள்; ‘இதில எங்களுக்குச் சம்பந்தமிலலை’ என்று சி. சுப்ரமணியம் சொன்னதை நான் வரவேற்கிறே[illegible]”

“ நாட்டில் [illegible]ம் -- ஒழுங்கு -- அமை[illegible]மல் பார்த்துக்கொள்[illegible]டிய பொறுப்பு மத்[illegible]க்கும் இருக்கிறது” எ[illegible]ள்பட சி. சுப்பிரமணியம் பேசியதைக் குறிப்பிட்டு ஒரு நிருபர் கேட்ட போது, முதலமைச்சர் கூறியதாவது:—

“ இந்தியாவின் மொத்தப் பாதுகாப்பிலும், அந்தந்த மாநிலங்களில் சட்டம் -- ஒழுங்கு -- அமைதியை நிலைநாட்டும் பிரச்சினையிலும் மத்திய அரசுக்கும் -- மாநில அரசுக்கும் பொறுப்பு இருக்கிறது என்பதை அரசியல் அமைப்புச் சட்டம் படித்திருக்கின்ற நாங்கள் மறுக்கவில்லை.”

தி. மு. கவில் ஏற்பட்டுள்ள பிளவுக்கு மூல விக்கிரகம் தலைமையமைச்சர் காரணமாக இருக்காது; உற்சவமூர்த்திகள்தான் காரணமாக இருக்கலாம் என்ற குற்றச்சாட்டை சி. சுப்பிரமணியம் மறுத்துள்ளதை, முதல்வரின் கவனத்திற்குச் செய்தியாளர் கொண்டு வந்தபோது அவர் கூறியதாவது:—

“ மூலவிக்கிரகம் ஈடுபடவில்லை; உற்சவ விக்கிரகங்கள் ஈடுபடுவதாக நான் சொன்னது அவரைக் குறிப்பிடுவதாக ஏன் சுப்பிரமணியம் நினைத்துக் கொண்டார் என்பது எனக்குத் தெரியவில்லை.”

செய்தியாளர்:— “ கருணாநிதி—எம். ஜி. ஆர். விவகாரம் அவர்கள் உள்கட்சிப் பிரச்சினை; அதில், புதிய காங்கிரசுக் கட்சியை அநாவசியமாக இழுத்து அய்யம்பேட்டை வேலை செய்ய வேண்டாம் -- என்று சுப்பிரமணியம் கூறியிருக்கிறாரே?”

கலைஞர்:—“ அய்யத்தை (சந்தேகத்தை)த்தான் சொன்னேன்; பேட்டை அல்ல. அது எனக்குத் தெரியாது; ‘அய்யம்பேட்டை வேலை’ என்கிறார் சுப்பிரமணியம்; அவர் சார்பாக அந்த ஊர் மக்களிடம் நான் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன்.”

சோடை போகும் ஒன்றை அண்ணா எங்களிடம் தரவில்லை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கு இன்னும் நேரம் இருக்கிறது’ என்று!

அண்ணன் மிதித்த மண் அல்லவா -- அதை மிதித்ததும் எனக்கு அப்படிக் கேட்கத் தோன்றியது; அதற்கு அவர், பத்திரிகையில், ‘நான் மன்னிப்புக் கேட்கமாட்டேன்; கருணாநிதியும் -- நெடுஞ்செழியனும் தான் மன்னிப்புக் கேட்க வேண்டும்’ என்று!

நாங்கள், ‘மன்னிப்பு’ என்ற வார்த்தையைக்கூடப் பயன்படுத்தவில்லை; விளக்க சமாதானம் கேட்டு எழுதிய கடிதத்தில்கூட, ‘வருத்தம தெரிவியுங்கள்’ என்றுதான் பொதுச் செயலாளர் நாவலர் அவர்கள் எழுதியிருக்கிறாரே தவிர, ‘மன்னிப்பு’ என்ற வார்த்தையைப் பயன்படுத்தவில்லை.

‘Apology’ என்பதற்கும் -- ‘Regret’ என்பதற்கும் இருக்கின்ற வித்தியாசம், தமிழில் ‘மன்னிப்பு’ என்பதற்கும் -- ‘வருத்தம்’ என்பதற்கும் இடையே இருப்பது போன்றதுதான்!

ஆனால், நாங்கள் மன்னிப்புக் கேட்கச் சொன்னதைப்போல் அவருடைய ரசிகர்களை ஆத்திரமூட்டி -- நாங்கள் மன்னிப்புக் கேட்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்.

நெடுஞ்செழியன் மன்னிப்புக் கேட்கக்கூடியவர்தான்--நீதி வளைந்திருந்தால்!

ஆரியப் படைகடந்த நெடுஞ்செழியன் நீதி வளைந்த காரணத்தால், மன்னிப்பு கேட்டான் கண்ணகியிடத்தில்; இந்த நெடுஞ்செழியன் நீதி வளையா செங்கோலைக் கையில் வைத்திருக்கின்ற நெடுஞ்செழியனே தவிர நீதி வளைந்த செங்கோலைக் கையிலே வைத்திருக்கின்றவர் அல்லர்!

அப்படிப்பட்ட சொத்தினை தி. மு. கழகத்திற்குச் சோடையாக--சொள்ளையாகப் பேரறிஞர் அண்ணா அவர்கள் தந்துவிட்டுப் போகவில்லை!

அவரைப் பொதுச்செயலாளராக--அவருடைய அன்பு நண்பராக இருக்கின்ற என்னைக் கழகத்தின் தலைவராக ஏற்றுக் கொண்டிருக்கின்ற தி.மு. கழகத்திலே இருக்கின்ற நண்பர்களே--என்னையும் -- நாவலரையும் மன்னிப்புக் கேட்கச் சொன்னாரே என்பதற்காக யாரும் ஆத்திரப்படாதீர்கள்! அமைதி இழக்காதீர்கள்! வருத்தப்படாதீர்கள்!

எவ்வளவோ ஏசினார்கள்--பேசினார்கள்; அண்ணாவைப் பேசாததா--அவரை இகழாததா--அவரைப் பற்றிக் கூறாத பழிச்சொற்களா?

அவைகளை எண்ணிக்கொள்ளுங்கள்--‘அன்று அண்ணாவை இகழ்ந்தார்கள்; இன்று கருணாநிதியையும் -- நாவலரையும் இகழ்கிறார்கள்’ என்று.

அண்ணா இகழப்பட்டார்--கழகம் வளர்ந்தது! கருணாநிதியும்--நாவலரும் இன்று இகழப்படுகிறார்கள்; ஆகவே, ‘கழகம் மேலும் வளரும்’ என்ற அந்தத் தெம்போடு--உற்சாகத்தோடு--அந்த உறுதியோடு நீங்கள் ஆக்கம் பெற்றுக் கழகத்தை மேலும் உறுதியுடன் வளர்ப்பதற்குச் சூளுரை மேற்கொள்ள வேண்டும்.”

முன்னாள் மன்னர்கட்கு உதவிப் பணம்

ரூ. 10.70 கோடி வழங்கப்படும் டில்லியின் புதிய திட்டம்

புதுடில்லி. அக. 24—

முன்னாள் மன்னர்களுக்கு வழங்குவதற்கான தொகைகள் பற்றிய திட்டத்தை இந்திய அரசாங்கம் இறுதி செய்தது

இத்திட்டத்தின்கீழ், அதிகபட்சம் ஓராண்டு அரச மானியம் அவர்களுக்குத் தரப்படும்; மொத்தம் ரூ. 10.70 கோடி வழங்கப்படும்.

முன்னாள் மன்னர்களில் பெரும்பான்மையோர் குறுநில மன்னர்களாக இருந்தவர்கள்; அவர்களுக்கு அதிகத் தொகை கிடைக்க வேண்டும் என்ற கொள்கைக்கு இணங்க, இனம் -- மானியத் தொகைகள் நிர்ணயிக்கப்பட்டன.

ரூ 15,000-க்குக் குறைவாக அரச மானியம் பெற்று வந்தவர்களுக்கு அவர்களுடைய அரச மானியத்தைப்போல் எட்டு மடங்கு கிடைக்கும்.

ரூ. 15,000-க்குமேல் ரூ 50,000-க்குக் குறைவாகப் பெற்று வந்தவர்களுக்கு ஆறு மடங்குமுதல் 8 மடங்கு வரை கிடைக்கும்.

ஓர் இலட்சம் ரூபாய் பெற்று வந்தவர்களுக்கு ரூ. 5.30 இலட்சம் கிடைக்கும்.

இராசாங்கம் உடல் அடக்கம்

அமைச்சர்கள் இறுதி மரியாதை

கலைஞர் -- நாவலர் இரங்கற் செய்திகள்

மதுரை, அக். 24—

மதுரையில் நேற்று முன்தினம் மாரடைப்பால் மரணமடைந்த நாடாளுமன்றத் தி. மு. கழக உறுப்பினர் எம். இராசாங்கம் அவர்களின் உடல் நேற்று அடக்கம் செய்யப்பட்டது.

அமைச்சர்கள் அன்பில் தர்மலிங்கம், ஓ. பி. இராமன், மதுரை மேயர் எஸ். முத்து, எஸ். எஸ். தென்னரசு எம் எல். சி., பார்வர்டு பிளாக் கட்சித் தலைவர் மூக்கையா தேவர், மற்றும் சட்டமன்ற -- நாடாளுமன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள் இறுதி மரியாதை செலுத்தினர்.

மதுரையிலிருந்து கூடலூருக்கு எடுத்துச் செல்லப்பட்ட அவருடைய உடல், நேற்று முழுவதும் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தது.

மாலை 5 மணிக்கு இறுதி ஊர்வலம் புறப்பட்டது; அமைச்சர்கள் அன்பில் தர்மலிங்கம் - ஓ பி. இராமன் -- மதுரை எஸ். முத்து உட்பட முன்னணித் தோழர்களும், பொதுமக்களும் ஊர்வலத்தில் கலந்துகொண்டனர்.

இராசாங்கத்தின் சொந்தத் தோட்டத்தில் அவருடைய உடல் அடக்கம் செய்யப்பட்டது.

அங்கு வட்ட தி.மு க. செயலாளர் செல்லதுரை தலைமையில் அனுதாபக் கூட்டம் நடந்தது; பலர் இரங்கலுரை ஆற்றினர்.

மேயர் எஸ். முத்து பேசுகையில், ‘இராசாங்கத்துக்குக் கூடலூரில் சிலை வைக்கப்படும்’ என்று கூறினர்.

கலைஞர் இரங்கல்

திரு. எம். இராசாங்கம் எம்.பி. மறைவு குறித்து விடுத்துள்ள இரங்கல் செய்தியில் கழகத் தலைவரும் முதலமைச்சருமான கலைஞர் அவர்கள் கூறியிருப்பதாவது:—

“ நண்பர் இராஜாங்கத்தின் மறைவு, அதிர்ச்சி தரும் செய்தியாகும்.

“ கனிவும் துணிவும் கொண்ட அந்த அருமை நண்பரின் இழப்பு, அவருடைய குடும்பத்தாருக்கு மட்டுமல்ல -- அவர் கட்டிக்காத்த கழகத்துக்கும், நாட்டுக்கும் பெரிய இழப்பாகும்.”

இராசாங்கம் மறைவு காரணமாக மத்திய திட்ட அமைச்சர் டி. பி. தாருக்கு அளிக்கவிருந்த விருந்தை முதலமைச்சர் ரத்து செய்துவிட்டார்.

இராசாங்கத்தின் குடும்பத்தினருக்கு இரங்கல் செய்தி அனுப்பியிருக்கிறார்.

நாவலர் இரங்கல்

தி.மு. கழகப் பொதுச்செயலாளரும் கல்வியமைச்சருமான நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், கூடலூரிலுள்ள இராசாங்கத்தின் துணைவியாருக்கு அனுப்பியுள்ள இரங்கல் செய்தியில் கூறியிருப்பதாவது:—

“ தங்கள் கணவரின் மரணச் செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்தேன்; எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.”

கல்வி -- உள்ளாட்சித்துறை அமைச்சர்

இரா. நெடுஞ்செழியன்

நிகழ்ச்சிகள்

அக். 25 காலை 10 மணி: கலசப்பாக்கம் -- கால்நடை மருத்துவமனைத் திறப்பு; 11 30 மணி: கடலாடி—தானியச் சேமிப்பு நிலையம் திறப்பு; மாலை 6 மணி திருவண்ணாமலை—நகர மன்றத்தில அறிஞர் அண்ணா படத் திறப்பு; இரவு 7 மணி: திருவண்ணாமலை பொதுமக்கள் வரவேற்பு.

இடையார்குடி தி.மு.க.

பொது உறுப்பினர்கட்கு:

“ உடையார்குடி தி. மு. கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம் 26—10—72 இரவு 7 மணியளவில், சீரணி அரங்கில் அவைத் தலைவர் தோழர் எஸ். தெய்வசிகாமணி தலைமையில் நடைபெறும்; கழக ஆக்கப்பணிகள் சம்பந்தமாகக் கலந்து பேச வேண்டியிருப்பதால் உறுப்பினர்கள் அனைவரும் தவறாது வருகை தர வேண்டுகிறேன்”

என்று, செயலாளர் ந. இராமலிங்கம் அறிவிக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, [illegible] இதழ் வெளியிடப்படுகிறது.